STC.No.623/2021 PW1 - ஞானபாலன் நாள்-03.02.2024

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

**1.** எனக்கு தற்போது 59 வயது ஆகிறது. நான் 12-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் டிரான்ஸ் போர்ட் கம்பெனி நடத்தி ஆவின் பால் டேங்கர் லாரியை வாடகைக்கு விட்டு வருகிறேன். மேலும் சமீப காலமாக ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வருகிறேன். அதைத்தவிர வேறு எந்த தொழிலும் இல்லை. எனது மகன் பெயர் G.கிருபாகரன் என்றால் சரிதான். எனது மனைவி பெயர் G.பத்மினி என்றால் சரிதான். எனது மகன் தற்போது அமெரிக்காவில் உள்ளார். ம.சா.ஆ-6 வருமான வரி அறிக்கையை நான் தாக்கல் செய்த தேதி 23.07.2022 என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு ஒரு வருடம் கழித்து மேற்படி வருமான வரி கணக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் கரூர் வைஸ்யா வங்கியில் ரூ.33,22,179/- கடன் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கடனை 2021-ம் ஆண்டு வாங்கினேன்.

**2.** மேற்படி கடன் தற்போது நிலுவையில் உள்ளது. மேற்படி கடனுக்கு மாதத் தவணையாக ரூ.32,000/- செலுத்தி வருகிறேன். எனது மனைவி இல்லத்தரசியாக உள்ளார். எனது மனைவியும் டிரான்ஸ் போர்ட் நிறுவனம் நடத்தி வருகிறார். மேலும் வருமான வரி கணக்கும் செலுத்தி வருகிறார். மேற்படி வருமான வரி கணக்கில் வட்டித்தொகையாக ரூ.3,29,910/- செலுத்தியுள்ளதாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தொகையை கரூர் வைஸ்யா வங்கிக்கு செலுத்தி வருகிறேன். மேற்படி வருமான வரி கணக்கில் எனது மனைவியான G.பத்மினிக்கு ரூ.51,60,000/- கடனாக கொடுத்தாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். அதனை ஒரே தொகையாக கொடுக்கவில்லை சிறிது சிறிதாகத்தான் கொடுத்தேன். அதற்குரிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயராக உள்ளேன். நான் இதே நீதிமன்றத்தில் காசோலை மோசடி வழக்குகள் வாதியாக இருந்து சக்திவேல், மற்றொரு சக்திவேல், பழனிசாமி ஆகியோர் மீது தாக்கல் செய்துள்ளேன். மற்றொரு காசோலை மோசடி வழக்கு ஒரு நாராயணசாமி என்பவர் மீது தாக்கல் செய்திருந்து அது 6 மாதத்திற்கு முன்பு வழக்கு முடிந்துவிட்டது.

**3.** மேற்படி வருமான வரி கணக்கில் Net income from money lending business என்னும் தலைப்பில் ரூ.3,29,910/- காட்டியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தொகையானது சுமார் 4, 5 நபர்களிடம் இருந்து நான் வசூல் செய்த தொகையாகும். அவர்களது பெயர்களை தற்போது என்னால் கூற இயலாது. மேலும் மேற்படி வருமான வரி கணக்கில் Interest received from G.Padmini என்னும் தலைப்பில் ரூ.3,29,910/- காட்டியுள்ளேன் என்றால் சரிதான். அந்த தொகையானது தனியாக எனது வருமான வரி கணக்கில் காட்டப்படவில்லை என்றால் சரிதான். மேலும் எனது வருமான வரி கணக்கில் Interest paid என்று கூறி நான் ரூ.3,29,910/ செலுத்தியுள்ளதாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அந்த வட்டித் தொகையானது யாருக்கு எப்போது செலுத்தினேன் என்று மேற்படி வருமான வரி கணக்கில் குறிப்பாக கூறவில்லை என்றால் சரிதான். எனவே ம.சா.ஆ-6 வருமான வரி கணக்கை வைத்து மேற்படி வட்டித் தொகையை யாருக்கு எப்போது செலுத்தினேன் என்று கூற இயலாது என்றால் சரிதான்.

**4.** மேலும் எனது வருமான வரி கணக்கில் வருமான வரி ஆண்டு 2022 - 2023(நிதி ஆண்டு

01.04.2021 முதல் 31.03.2022 வரை) ஆண்டிற்கு எனது வசம் இருந்த நிகரத்தொகையாக ரூ.28,271/- என்று காட்டியுள்ளேன். மேலும் எனது வங்கிக்கணக்கில் ரூ.2,47,800/- இருப்பு இருந்ததாக காட்டியுள்ளேன். மேற்படி வருமான வரி கணக்கை வைத்து மேற்படி நிதியாண்டில் எந்தெந்த மாதத்தில் மேற்படி தொகை என்னிடம் இருந்தது என்று தற்போது குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் சரிதான். எனவே ம.சா.ஆ-6 வருமான வரி கணக்கு வழக்கிற்க்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும் அதில் எவ்வித உண்மைத்தன்மையும் இல்லை என்றாலும், சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

**5.** இவ்வழக்கில் எதிரிக்கு கடந்த 31.07.2021 அன்று எனது வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அதில் எதிரியின் பெயருக்கு அருகில் EB Staff என்று குறிப்பிட்டுள்ளேன். அந்த சமயத்தில் அவர் மின்சார வாரியத்தில் பணியில் இருந்தாரா என்றால் இல்லை. ஆனால் EB Staff retired என்று குறிப்பிட்டு அனுப்பவில்லை என்றாலும் அவ்வாறு குறிப்பிட்டு தான் அனுப்பியிருக்க வேண்டும் என்றாலும் சரிதான். நான் 27.07.2021 அன்று வழக்கு காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்தேன். 28.07.2021 அன்று Payment stopped by drawer என்று காரணம் கூறி திருப்பப்பட்டது. நான் அனுப்பிய சட்ட அறிவிப்புக்கு எதிரி தனது வழக்கறிஞர் மூலம் எனது வழக்கறிஞருக்கும், எனக்கும் 22.08.2021 தேதியில் பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பில் எதிரி ஏற்கனவே ஒரு நாராயணசாமி என்பவரிடம் கடன் பெற்று அதற்கு ஈடாக வழக்கு காசோலை உள்பட மொத்தம் 6 காசோலைகளை 2017-ம் ஆண்டிலேயே கொடுத்திருந்தாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கடன் தொகையை அவருக்கு திருப்பி செலுத்தும் காலக்கட்டத்தில் ஈடாக கொடுத்த காசோலையை திருப்பி தராமல் மோசடி செய்ய முயற்சி செய்தார் என்று அதில் குறிப்பிட்டுள்ளார் என்றாலும் சரிதான்.

**6**. அதனால் கடந்த 29.09.2018 தேதியிலேயே வழக்கு காசோலை உள்ளிட்ட 6 காசோலைகளும் வசூலுக்கு வரும் பட்சத்தில் அதனை நிறுத்தி வைக்குமாறு கோரி SBI பவானி கிளைக்கு மனு கொடுத்திருந்தார் என்று அந்த பதில் அறிவிப்பில் குறிப்பிட்டிந்த விபரம் தெரியுமா என்றால் இருக்கலாம் தற்போது ஞாபகமில்லை. 29.09.2018 தேதிய மனு அடிப்படையில் தான் வழக்கு காசோலையானது 28.07.2021 தேதியில் Payment stopped by drawer என்று காரணம் கூறி திருப்பப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக SBI பவானி கிளை மேலாளரை எனது தரப்பு சாட்சியாக இவ்வழக்கில் விசாரிக்க போகிறேனா என்றால் அதற்கு அவசியமில்லை. மேற்படி அறிவிப்பில் எதிரி என்னை யார் என்றே தெரியாது என்றும் என்னிடம் எவ்வித தொகையும் கடன் பெறவில்லை என்றும், EB staff என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார் என்றால் சரிதான். எனவே இந்த வழக்கு காசோலையானது எனக்கு வேண்டியப்பட்ட மேற்படி நாராயணசாமி என்பவரிடம் இருந்து பெற்று மோசடியாக பூர்த்தி செய்து எதிரியின் மீது பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**7.** எனவே நான் சொல்வது போல 11.04.2021 அன்று எதிரிக்கு ரூ.2,00,000/- கடனாக கொடுத்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. அவ்வாறு கடன் வாங்கி எதிரி எனக்கு புகார் காசோலையை கொடுத்தாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. அதேபோல எதிரி

27.07.2021 அன்று புகார் காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்ய சொன்னார் என்று சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு உரிய பதில் அறிவிப்பு அனுப்பிய பிறகும் அவரை மிரட்டி பணிய வைக்க வேண்டும் என்ற காரணத்திற்க்காக தான் இவ்வழக்கினை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு காசோலையானது சட்டப்படியான மறு பயனுக்கு வழங்கப்பட்ட காசோலை அல்ல என்கிற காரணத்தினாலேயே புகாரானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**8.** புகார் காசோலையானது 2017 ஆண்டிலிருந்தே தன்னிடம் இல்லை என்று எதிரி தனது பதில் அறிவிப்பில் சொல்லியிருந்த விபரத்தை நான் தெரிந்துகொண்டேன் என்றால் சரியல்ல. நான் எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் எதிரி அவரது பதில் அறிவிப்பில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யானது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனவே மேற்படி பதில் அறிவிப்பில் உள்ள சங்கதிகளை நான் தெரிந்துகொண்டேன் என்றாலும் சரிதான். மேலும் ஒரே நாளில், ஒரே சமயத்தில் ரொக்கமாக ரூ.2 லட்சம் கொடுக்க கூடிய வசதி எனக்கு இல்லை என்றால் சரியல்ல. எனக்கும், எதிரிக்கும் எவ்வித வரவு செலவும் இல்லை என்றாலும் எதிரிக்கு நான் யார் என்றே தெரியாது என்றாலும் சரியல்ல.

**9.** புகாரில் கூறியுள்ளவாறு எதிரிக்கு எந்தவித தொகையும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. புகாரில் எவ்வித உண்மையும் இல்லை என்றாலும் மோசடியான புகார் என்றாலும் சரியல்ல. மேலும் எதிரிக்கு நான் கொடுத்தாக சொல்லும் காலக்கட்டத்தில் அவர் கடன் வாங்க வேண்டிய எவ்வித தேவையும் அவருக்கு இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.-1 காசோலையில் தேதி ஒரு மையினாலும், பெயர் மற்றும் தொகை வேறொரு மையினாலும் நிரப்பப்பட்டது என்றால் சரிதான். எனவே புகாரானது சட்டப்படி செல்லத்தக்கது என்றாலும், தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.